



# வட-தென் திசையிலிருந்து சிங்காரத் தேசத்துக்கு

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *தானியேல் 11; தானி 8:3–8, 20–22; ஏசா 46:9, 10; தானி 8:9, 23; மத் 27:33-50.*

**மனன வசனம்:** அறிவாளிகளைப்புடமிடுகிறதற்கும்,சுத்திகரிக்கிறதற்கும்,வெண்மையாக்கு கிறதற்கும் அவர்களில் சிலர் விழுவார்கள்; முடிவுகாலபரியந்தம் இப்படியிருக்கும்; குறித்தகாலம் வர இன்னும் நாள் செல்லும். தானியேல் 11:35.

இந்தச் சவாலான அதிகாரத்தை படிக்கத்தொடங்கும்முன், சில கருத்துகளை மனதில் வைக்கவேண்டும். முதலாவதாக, தானியேலின் முந்தைய தீர்க்கதரிசனங்கள் மூன்றும் தீர்க்கதரிசியின் நாட்களிலிருந்து உலகத்தின் இறுதிவரை செல்கின்றன.

இரண்டாவதாக, தேவமக்களை ஒடுக்குகிற அரசுகள் தொடர்ச்சியாக வருகின்றன. மூன்றாவதாக, ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் மகிழ்ச்சியுடன் முடிகின்றன; தானியேல் 2 இல், சிலையை ஒரு கல் அழிக்கிறது; தானியேல் 7 இல், மனுஷகுமாரன் ராஜ்யத்தைப் பெறுகிறார்; தானியேல் 8-9 இல், மேசியாவின் வேலைமூலம் பரலோக ஆசரிப்புக் கூடாரம் பரிசுத்தமாகிறது. தேவனுடைய ராஜ்யம் நிறுவப்படுகிறது.

அதிகாரம் 11உம், இந்த மூன்று அடிப்படைக் கருத்துகளின்படியே உள்ளது. முதலாவதாக, இது பெர்சிய ராஜாக்களிடமிருந்து தொடங்கி, வடதிசை ராஜா தேவனுடைய பரிசுத்த பர்வதத்தைத் தாக்கும்வரை செல்கிறது. இரண்டாவதாக, வடதிசை ராஜாவுக்கும் தென்திசை ராஜாவுக்கும் இடையே நடக்கிற சண்டைகளையும், அவை தேவமக்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும் விவரிக்கிறது. மூன்றாவதாக, வடதிசை ராஜா அழிந்துபோகிற மகிழ்ச்சியான முடிவோடு முடிகிறது. 11:45. இது தீமையின் முடிவையும், தேவன் தமது நித்திய ராஜ்யத்தை நிறுவுவதையும் குறிக்கிறது.

*2020, மார்ச் 21 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தீர்க்கதரிசனத்தில் பெர்சியாவும் கிரேக்கமும்

**கேள்வி: தானியேலில் நாம் முன்பு கண்ட தீர்க்கதரிசனங்களை எவ்வாறு நினைவூட்டுகிறது? தானியேல் 11:1–4.**

---

பெர்சியாவிலிருந்து இன்னும் மூன்று ராஜாக்கள் தோன்றுவார்கள் என்று தானியேலிடம் காபிரியேல் கூறுகிறான். நான்காவது ராஜா அனைவரையும்விட பெரிய பணக்காரராக இருப்பான், கிரேக்கர்களைத் தூண்டிவிடுவான். கோரேஸுக்குப் பிறகு, வந்த மூன்று ராஜாக்கள்: கேம்பிசஸ், கிமு 530_522. பொய்யான ஸ்மர்திஸ், கிமு 522. தரியு 1 கிமு 522-486. நான்காவது ராஜா அகாஸ்வேரு. இவன் எஸ்தரின் புத்தகத்தில் வருகிறான். மிகவும் செல்வந்தன். எஸ்தர் 1:1-7. தீர்க்கதரிசனம் கணித்தபடி கிரேக்கத்தின்மேல் பெரிய இராணுவத்துடன் படையெடுத்தார்கள். ஆனால், அவன் படை பெரியதாக இருந்தாலும், வீரம்மிக்க ஒரு சிறிய கிரேக்கப் படையால் விரட்டப்பட்டான்.

மகா அலெக்சாண்டரே தானியேல் 11:3-ல் எழும் வலிமைமிக்க ராஜா. பண்டைய உலகின் பெரும் பகுதியை பிடித்தான். பேரரசை ஆட்சி செய்ய வாரிசு இல்லாமல் 32 வயதில் இறந்தான். எனவே, ராஜ்யத்தை அவரது நான்கு தளபதிகள் பிரித்துக்கொண்டார்கள்: செல்யூகஸுக்கு சிரியாவும் மெசப்பொத்தேமியாவும்; தாலமிக்கு எகிப்து; லிசிமேக்கஸுக்கு த்ரேஸும் சின்ன ஆசியாவும்; கசாண்டருக்கு மக்கெதோனியாவும் கிரேக்கமும்.

**கேள்வி: தீர்க்கதரிசனத்தில் வருகிறவன் அலெக்ஸாண்டர் என்று புரிந்துகொள்ள இந்த வசனங்கள் எவ்வாறு உதவுகின்றன? தானியேல் 11:2–4; 8:3–8, 20–22.**

---

**கேள்வி: பெயர்கள், தேதிகள், இடங்கள், வரலாற்று நிகழ்வுகள் ஆகியவற்றிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?**

---

முதலாவதாக, தேவன் முன்னறிவித்தபடி தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது என்பதை அறிகிறோம். தேவனுடைய வார்த்தை ஒரு போதும் தோல்வியடையாது. இரண்டாவதாக, தேவனே வரலாற்றின் ஆண்டவர். பேரரசர்கள், சர்வாதிகாரிகள், அரசியல்வாதிகளின் லட்சியத்தால் அரசாங்கங்கள் தோன்றுகின்றன என்று நாம் நினைக்கலாம். ஆனால், எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில்தாம் உள்ளன. நம்முடைய திட்டப்படி வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகிறார் என்று வேதாகமம் சொல்கிறது.

இறுதியில் தீமையை ஒழிப்பதற்கும், தேவனுடைய நித்திய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கும் இது எவ்வாறு வழிவகுக்கும்?

---

# சிரியாவும் எகிப்தும்

**கேள்வி:** தானியேல் 11:5–14 என்ன சொல்கின்றது?

---

---

மகா அலெக்சாண்டரின் மரணத்திற்குப் பிறகு, கிரேக்கப் பேரரசை அவனது நான்கு தளபதிகள் பிரித்துக்கொண்டார்கள். அவர்களுள் வடக்கே சீரியாவிலிருந்த செல்யூகஸின் வம்சமும், தெற்கே எகிப்திலிருந்த தாலமியின் வம்சமும் வெகுகாலம் நிலைத்திருந்து ஒருவரோடு ஒருவர் போராடினார்கள்.

இந்த இரண்டு வம்சங்களும் சம்பந்தப்பட்ட பல யுத்தங்களை தானியேல் 11:5-14 சொல்கின்றது. தீர்க்கதரிசனத்தின்படி, இந்த இரண்டு வம்சங்களையும் திருமணத்தால் ஒன்றிணைக்க ஒரு முயற்சி நடந்தது. ஆனால், அந்தக் கூட்டணி குறுகிய காலமே நிலைத்திருந்தது. தானி 11:6. செல்யூகஸின் பேரனான அந்தியோகஸ் தியோஸ் என்பவன் எகிப்திய மன்னர் தாலமி பிலடெல்பஸின் மகள் பெர்னிக்கேயாளை மணந்தான். இருப்பினும், அந்த ஒப்பந்தம் நீடிக்கவில்லை, தேவமக்களை நேரடியாகப் பாதிக்கிற மோதல் விரைவில் மீண்டும் தொடங்கியது. இவ்வாறு தானியேல் தீர்க்கதரிசிக்குப் பிறகு பல நூற்றாண்டுகள் தேவமக்களின் வாழ்க்கையைத் தொடும் சில முக்கியமான நிகழ்வுகளை தானியேல் 11 விவரிக்கிறது.

உலகின் அந்தப் பகுதியில் ஆதிக்கத்திற்காக ராஜ்யங்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடுவது தொடர்பான யுத்தங்களைப் பற்றிய விவரங்களை ஆண்டவர் ஏன் முன்னரே வெளிப்படுத்துகிறார் என்ற கேள்வியை நாம் கேட்கலாம். காரணம் எளிது: இந்த யுத்தங்கள் தேவ மக்களைப் பாதிக்கின்றன. ஆகவே, அடுத்த ஆண்டுகளில் தம் மக்கள் எதிர்கொள்ள இருந்த பல சவால்களை கர்த்தர் முன்பே அறிவித்தார். மேலும், தேவன் வரலாற்றின் ஆண்டவர். தீர்க்கதரிசனங்களை வரலாற்று நிகழ்வுகளுடன் ஒப்பிடுகையில், முன்னறிவிக்கப்பட்டபடி எல்லாம் நடப்பதைக் காணலாம். ஒருவருக்கொருவர் சண்டையிட்ட அந்த கிரேக்க ராஜ்யங்களின் மாறுபாடுகளை முன்னறிவிக்கும் தேவன் எதிர்காலத்தை அறிந்த தேவன். அவர் நம் நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் தகுதியானவர். இவர் பெரியவர்; மனித கற்பனையால் உருவாக்கப்பட்ட விக்கிரகம் அல்ல. அவர் வரலாற்று நிகழ்வுகளின் போக்கை இயக்குவது போல, நாம் அவரை அனுமதித்தால் நம் வாழ்க்கையையும் வழிநடத்துவார்.

ஏசாயா 46:9, 10இல், எவ்வளவு அடிப்படை கிறிஸ்தவ இறையியல் காணப்படுகிறது? எவ்வளவு பெரிய நம்பிக்கை இவ்வசனங்களில் உள்ளது? தேவன் இரக்கமுள்ளவராகவும் அன்பான வராகவும் இல்லாமல், பழிவாங்கும் நபராக இருந்தால், 10ஆவது வசனம் எவ்வளவு பயம் தருவதாக இருக்கும்?

# ரோமும் உடன்படிக்கையின் தலைவனும்

**கேள்வி: வசனம் கடினமாக இருந்தாலும், தானியேலில் வேறு எங்கு இந்த உருவகங்களைக் காணலாம்? தானியேல் 11:16–28.**

---

கிரேக்க ராஜாக்களிடமிருந்து அஞ்ஞான ரோமுக்கு ஏற்பட்ட அதிகார மாற்றத்தை தானியேல் 11:16 பேசுகிறது: 'ஆகையால் அவனுக்கு விரோதமாக வருகிறவன் தன் இஷ்டப்படிச் செய்வான்; அவனுக்கு முன்பாக நிலைநிற்பவன் ஒருவனும் இல்லை; அவன் சிங்காரமான தேசத்தில் தங்குவான்; எல்லாம் அவன் கைவசமாகும்.' சிங்காரமான தேசம் என்பது, எருசலேம் இருக்கிற இஸ்ரவேல் தேசம். அந்தப் பகுதியைக் கைப்பற்றின புதிய வல்லமை அஞ்ஞான ரோம். இதே நிகழ்வை தானியேல் 8 இன் சின்ன கொம்பின் கிடைமட்ட விரிவாக்கமும் குறிப்பிடுகிறது. 'சின்னதான ஒரு கொம்பு புறப்பட்டு சிங்காரமான தேசத்துக்கு நேராக மிகவும் பெரியதாயிற்று. தானி 8:9. எனவே, இந்தக் கட்டத்தில் உலகைக் கட்டுப்படுத்தின சக்தி அஞ்ஞான ரோம் என்பது தெரிகிறது.

இன்னும் சில வசனங்கள் இந்த கருத்தை வலுப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, 'செழிப்பான ராஜ்யத்தில் தண்டல்காரனைத் திரியப்பண்ணுகிற ஒருவன்' என்பது அகஸ்துராயனைக் குறிக்கும். தானி 11:20. மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக மரியாளும் யோசேப்பும் பெத்லகேமுக்குச் சென்றபோதுதான் இயேசு பிறந்தார். மேலும், தீர்க்கதரிசனத்தின்படி இவருக்குப்பின் 'அவமதிக்கப்பட்டவன் ஒருவன்' ஆட்சிக்கு வரவேண்டும். தானி 11:21. அகுஸ்துராயனுக்குப் பிறகு அவனுடைய வளர்ப்பு மகன் திபேரியுராயன் ஆட்சிக்கு வந்தான். திபேரியுராயன் மிகவும் மோசமான நபர் என்று வரலாறு சொல்கிறது.

திபேரியுராயனின் ஆட்சியின் போதுதான் 'உடன்படிக்கையின் தலைவனும் முறிக்கப்படுவான்.' தானி 11:22. சிலுவையில் கிறிஸ்து அறையப்பட்டதை இது தெளிவாகக் குறிக்கிறது. இதனை 'பிரபுவாகிய மேசியா சங்கரிக்கப்படுவார்' என்றும் தானி 9:25,26 சொல்கிறது. மத்தேயு 27:33-50. திபேரியுராயனின் ஆட்சியில்தான் அவர் கொல்லப்பட்டார். இங்கே 'உடன்படிக்கையின் தலைவன்' என்று இயேசுவைக் குறிப்பிடுவது வரலாற்று நிகழ்வுகளின் ஓட்டத்தைக் காட்ட உதவும் ஒரு சக்திவாய்ந்த குறிப்பாகும், இது தேவனுடைய அற்புதமான முன்னறிவிப்பு. இந்த தீர்க்கதரிசனங்கள் எல்லாவற்றிலும் தேவன் சொன்னபடியே நடந்துள்ளது. எனவே எதிர்காலத்தில் நடக்கும் என்று அவர் சொல்வதை நாம் நிச்சயமாக நம்பலாம்.

---

அனைத்து அரசியல் – வரலாற்று நிகழ்வுகளுக்கிடையில்கூட, 'உடன்படிக்கையின் தலைவனாம்' இயேசு வெளிப்படுகிறார். எல்லா எழுச்சிகளும் அரசியல் சூழ்ச்சிகளும் இருந்தாலும், இயேசுவே வேதாகமத்தின் மையமாக இருக்கிறார் என்பதை இது எவ்வாறு நமக்குக் காட்டுகிறது?

# அடுத்த வல்லமை

**கேள்வி: அஞ்ஞான ரோமுக்குப்பிறகு எழும்பும் வல்லமை எது? தானியேல் 11:29-39.**

தானியேல் 11:29-39 ஒரு புதிய அமைப்பைக் குறிக்கிறது. இந்த அமைப்பு அஞ்ஞான ரோமப் பேரரசின் தொடர்ச்சியாக இருந்து, முந்தைய அரசின் சில குணாதிசயங்களைப் பெற்றிருந்தாலும், சில அம்சங்களில் இது வேறுபட்டது. 'அவனுடைய பின்நடபடி முன்நடபடியைப்போல் இராது' என்று தானி 11:29 கூறுகிறது. அது ஒரு மதவல்லமையாகச் செயல்பட்டது. இது தன் தாக்குதலை தேவன்மேலும், அவருடைய மக்கள்மேலும் தொடுக்கும். இந்த ராஜா செய்த சில செயல்களைப் பார்ப்போம்.

முதலாவதாக, அவன் 'பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாகக் குரோதங்கொண்டு' செயல்படுவான். தானி 11:30. தேவனுடைய இரட்சிப்பின் உடன்படிக்கைக்கு எதிராகச் செயல்படுகிறவன்.

இரண்டாவதாக, இந்த ராஜா 'பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, அன்றாடபலியை நீக்கி' விடுவான். தானி 11:31. 'அது சேனையினுடைய அதிபதி பரியந்தமும் தன்னை உயர்த்தி, அவரிடத்திலிருந்து அன்றாட பலியை நீக்கிற்று; அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டதுப என்பதை தானியேல் 8:11 இல் ஏற்கனவே பார்த்தோம். இது பரலோக ஆசரிப்புக் கூடாரத்தில் கிறிஸ்து செய்கிற ஊழியத்திற்கு எதிரான ஆன்மிகத் தாக்குதல் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, ஆசரிப்புக் கூடாரத்தின்மீதான தாக்குதலின் விளைவாக, இந்த வல்லமை தேவனுடைய ஆலயத்தில் 'பாழாக்கும் அருவருப்பை' வைக்கிறது. சின்ன கொம்பு செய்கிற விசுவாசத் துரோகச் செயல்களே இவை. தானி 8:13.

நான்காவதாக, இந்த சக்தி தேவனுடைய மக்களைத் துன்புறுத்துகிறது:'அறிவாளிகளைப் புடமிடுகிறதற்கும், சுத்திகரிக்கிறதற்கும், வெண்மையாக்குகிறதற்கும் அவர்களில் சிலர் விழுவார்கள்; முடிவுகாலபரியந்தம் இப்படியிருக்கும்; குறித்தகாலம் வர இன்னும் நாள் செல்லும்.' தானி 11:35. தானியேல் 7, 8 ஆம் அதிகாரங்களின் சின்ன கொம்பை இது நினைவூட்டுகிறது. தானி8:10; தானி7:25.

ஐந்தாவதாக, 'ராஜா தனக்கு இஷ்டமானபடி செய்து, தன்னை உயர்த்தி, எந்த தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி, தேவாதி தேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான்.' தானி11:36. தானியேல் 7 ஆம் அதிகாரத்தின் சின்ன கொம்பை இது நினைவூட்டுகிறது தானி 7:8, 25.

வேறே ஒற்றுமைகளும் உண்டு. தானியேல் 7, 8 ஆம் அதிகாரங்களில் நாம் பார்த்த வல்லமை எது? சமூக அழுத்தங்கள் இருந்தாலும், அதை அடையாளம் காண்பதில் உறுதியாக இருப்பது நமக்கு ஏன் மிகவும் முக்கியமானது?

# இறுதி நிகழ்வுகள்

**கேள்வி: தானியேல் 11:40–45இல் என்ன நடக்கிறது?**

இப்பகுதியைப் புரிந்துகொள்ள சொற்றொடர்கள் நமக்கு உதவுகின்றன:

**முடிவுகாலம்:** இந்தச் சொற்றொடர் தானியேல் புத்தகத்தில் மட்டுமே உள்ளது. தானி 8:17; 11:35, 40; 12:4, 9. இது 1798 இல் போப்பாண்டவர் கைதானதிலிருந்து உயிர்த்தெழுதல்வரை நீடிக்கிறது. தானி 12:2.

**வடதிசை ராஜா:** இந்த பெயர் புவியியல் ரீதியாக செலூக்கிய வம்சத்தைக் குறிக்கிறது, ஆனால், பின்னர் அது அஞ்ஞான ரோமையும், இறுதியில் போப்புமார்க்க ரோமையும் குறிக்கிறது. எனவே, இது ஒரு புவியியல் இருப்பிடம் அல்ல; தேவமக்களின் ஆன்மிக எதிரியைக் குறிக்கிறது. மேலும், உண்மையான தேவனுக்குப் போலியாக இருக்கிறவனும் வடதிசையை உரிமை கோருகிறவன்தான். ஏசா. 14:13.

**தென்திசை ராஜா:** இந்த பெயர் யூதாவுக்குத் தெற்கே எகிப்தில் இருந்த தாலமி வம்சத்தைக் குறிக்கிறது. ஆனால், தீர்க்கதரிசனம் நிறைவேறி வருகையில், அது ஓர் இறையியல் பரிமாணத்தைப் பெறுகிறது, சில அறிஞர்களால் இது நாத்திகம் என்று சொல்லப்படுகிறது. வெளி 11:8இல் எகிப்தைப்பற்றிய குறிப்பில் 'இது நாத்திகம்' என்று எலன் ஜி. ஒய்ட்டும் கூறுகிறார். *GC,* பக். 269.

**சிங்காரமான பரிசுத்த பர்வதம்:** பழைய ஏற்பாட்டு காலங்களில் இந்தச் சொற்றொடரானது இஸ்ரவேலின் தலைநகராகிய சீயோனைக் குறிக்கிறது. புவியியல் ரீதியாக இது வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் உள்ளது. சிலுவைக்குப்பிறகு, தேவனுடைய மக்களை இன அடிப்படையிலும், புவியியல் அடிப்படையிலும் வரையறுப்பதில்லை. அதனால், சிங்காரமான பரிசுத்த பர்வதம் என்பது உலகெங்கிலும் உள்ள தேவ மக்களின் அடையாளப் பெயராக இருக்கவேண்டும்.

1. **வடதிசை ராஜாவை தென்திசை ராஜா தாக்குகிறான்:** பிரெஞ்சுப் புரட்சியானது மதத்தை ஒழிக்கவும் போப்பாண்டவரைத் தோற்கடிக்கவும் முயன்றது; ஆனால் தோல்வியடைந்தது.
2. **தென்திசை ராஜாவை வடதிசை ராஜா தாக்கித் தோற்கடிக்கிறான்:** போப்பாண்டவர் தலைமையிலான மதச்சக்திகள் இறுதியில் நாத்திகச் சக்திகளை வென்று, தோற்கடிக்கப்பட்ட எதிரியுடன் கூட்டணியை உருவாக்கும்.
3. **ஏதோம், மோவாப், அம்மோனின் முக்கியமக்கள் தப்புவார்கள்:** தேவனுடைய உண்மையான மக்களிடையே கணக்கிடப்படாதவர்களில் சிலர் கடைசி நேரத்தில் மந்தையில் சேருவார்கள்.
4. **சிங்காரமான பரிசுத்த பர்வதத்தைத் தாக்க வடதிசை ராஜா தயாராகிறான், ஆனால் அவன் முடிவுக்கு வருகிறான்:** தீய சக்திகள் அழிக் கப்பட்டு, தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிறது.

இறுதியில், தேவனும் அவருடைய மக்களும் வெற்றிபெறுவார்கள் என்பதை அறிந்து, நாம் எவ்வாறு ஆறுதல்பெற முடியும்?

## மேலும் படிக்க:

தானியேல் 11:29–39 ஐக் குறிப்பிடுகையில், மார்ட்டின் லூதர் தானியேல் 11:31 இன் பாழாக்கும் அருவருப்பு என்பது போப்பாண்டவரும் அவர்களுடைய கோட்பாடுகளும் என்று அடையாளம்காட்டினார் என்பது சுவாரஸ்யமானது. ஆகவே, தானியேல் 7, 8, 11 அதிகாரங்களுக்கு இடையே இருக்கிற தொடர்பு லூதர் போன்ற புரொட்டஸ்டன்ட் வேதாகம உரையாளர்களின் பார்வையை வலுப்படுத்துகிறது. போப்பாண்டவரின் நிறுவனமும் அதன் போதனைகளும் வரலாற்றில் இந்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாக உள்ளன. இதுதொடர்பாக, எலன் ஜி. ஒய்ட் கூறுகிறார்: 'ரோம அதிகார வரம்பிற்குள் உள்ள எந்தச் சபையும் மனசாட்சியின் சுதந்திரத்தை அனுபவிக்க தடையின்றி விடப்படவில்லை. அதிகாரம் கிடைத்தவுடன், அவளது கட்டுப்பாட்டை முன்பு ஒப்புக்கொள்ள மறுத்த அனைத்தையும் நசுக்கிவிடுவாள். ஒன்றன்பின் ஒன்றாக சபைகள் அவளுடைய ஆதிக்கத்திற்கு அடிபணிந்தன.' *GC*, பக். 62.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *கடைசி நாட்களில் ரோமின் பங்குகுறித்து வேதாகமம் கற்பிக்கிற விஷயங்களில் சமரசம்செய்யாமலும் பிறர் உணர்வுகளைப் புண்படுத்தாமலும் இருக்க நாம் என்ன செய்யவேண்டும்?*

2 *'ஜனங்களில் அறிவாளிகள் அநேகருக்கு அறிவை உணர்த்துவார்கள்; அநேக நாள்மட்டும் பட்டயத்தினாலும் அக்கினியினாலும் சிறையிருப்பினாலும் கொள்ளையினாலும் விழுவார்கள்.' என்று தானியேல் 11:33 கூறுகிறது. தேவனுக்கு உண்மையுள்ள சிலரின் முடிவுபற்றி இந்த வசனம் என்ன சொல்கிறது? இரத்தச் சாட்சியாக மரித்தற்கு முன்பு இவர்கள் என்ன செய்தார்கள்? இன்று இதில் நமக்கு என்ன செய்தி இருக்கிறது?*

3 *'ராஜா தனக்கு இஷ்டமானபடி செய்து, தன்னை உயர்த்தி, எந்த தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி, தேவாதி தேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான்; கோபம் தீருமட்டும் அவனுக்குக் கைகூடிவரும்; நிர்ணயிக்கப்பட்டது நடந்தேறும்' என்று தானியேல் 11:36 கூறுகிறது. இது யாரை, எதை உங்களுக்கு நினைவூட்டுகிறது? ஏசா 14:12-17; 2 தெச 2:1-4.*

4 *தானியேல் 11:27, 29,35 ஆகிய வசனங்கள் 'குறித்தகாலம்' என்கிற சொற்றொடரைப் பயன்படுத்துகின்றன. வரலாற்றின்மேல் தேவனுக்கு இருக்கிற கட்டுப்பாட்டைப்பற்றி அது என்ன சொல்கிறது?*